www.Padasalai.Net www.CBSEtips.in

8 - STD

# அரையாண்டுத் தேர்வு - 2022

## தமிழ்

நேரம்: 2.30 மதிப்பெண்கள்: 100

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.
சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக 10 x 1 = 10

1. வண்மொழி என்பதன் பொருள் ________.
அ) புகழ் ஆ) வளமிக்க மொழி
இ) தன்னிகரில்லாத மொழி ஈ) ஈடு இணையற்ற மொழி

2. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ________.
அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி

3. விசும்பு என்பதன் பொருள்
அ) வானம் ஆ) கலவை இ) வழக்கம் ஈ) நிலவு

4. இயற்கையைப் போற்றுதல் தமிழர் ________.
அ) பொழுது ஆ) மரபு இ) வரவு ஈ) தகவு

5. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ________.
அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்தரனார்

6. நீளுழைப்பு என்னும் சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது ________.
அ) நீளு+உழைப்பு ஆ) நீண்+உழைப்பு
இ) நீள்+அழைப்பு ஈ) நீள்+உழைப்பு

7. குறிப்பு வினையெச்சம் - வெளிப்படையாகக் காட்டாதது.
அ) காலத்தை ஆ) வினையை இ) பண்பினை ஈ) பெயரை

8. 'அறத்தான் வருவதே இன்பம்' இத்தொடரில் ______ வேற்றுமை பயின்று வந்துள்ளது.
அ) இரண்டாம் ஆ) நான்காம் இ) மூன்றாம் ஈ) ஐந்தாம்

9. வீட்டு உபயோகப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டம்.
அ) நீலகிரி ஆ) கரூர் இ) கோயமுத்தூர் ஈ) திண்டுக்கல்

10. வெங்கரி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.
அ) வெம்+கரி ஆ) வெம்மை+கரி இ) வெண்+கரி ஈ) வெங்+கரி

II. பொருத்துக 4 x 1 = 4

11. மட்பாண்டம் - தோன்றல் விகாரம்
12. மரவேர் - இயல்புப் புணர்ச்சி
13. மணிமுடி - கெடுதல் விகாரம்
14. கடைத்தெரு - திரிதல் விகாரம்

III. எவையேனும் 4 வினாக்களுக்கு மட்டும் விடையளி. 6 x 2 = 12

15. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
16. நோயின் மூன்று வகைகள் யாவை?
17. செய்யுளின் மரபுகளை ஏன் மாற்றக் கூடாது?
18. வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்த்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக?
19. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
20. பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?
21. பயிர்கள் வாட்டமின்றிக் கிளைத்து வளரத் தேவையானது யாது?
22. எம்.ஜி.ஆரின் சமூக நலத்திட்டங்களுள் நான்கினை எழுதுக?
23. பழியின்றி வாழும் வழியாக, திருக்குறள் கூறுவது யாது?

III. எவையேனும் 4 வினாக்களுக்கு மட்டும் விடையளி. 4 x 2 = 8

24. வினைமுற்று என்றால் என்ன?
25. வினையெச்சத்தின் வகைகள் யாவை?



Scanned with CamScanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

26. இரட்டைக் கிளவிக்கு இரண்டு சான்று தருக?
27. யாப்பு இலக்கணத்தின்படி செய்யுளுக்கு உரிய உறுப்புகளை எழுதுக?
28. விகாரப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?
29. உடனிகழ்ச்சிப் பொருள் என்றால் என்ன?

**IV. அடிபிறழாமல் எழுதுக** **4 + 2 = 6**

30. 'கல்வி அழகே அழகு' என்ற நீதிநெறிவிளக்கப் பாடலை எழுதுக.
31. "படும்" - என முடியும் திருக்குறளை எழுதுக.

**V. எவையேனும் 4 வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **4 x 4 = 16**

32. தமிழ் மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துக்களை எழுதுக.
33. நில வளத்தினைக் காப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய செயல்களாக நீங்கள் கருதுவன யாவை?
34. நோயின் வகைகள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை?
35. மழை வளம் பெருக நாம் செய்ய வேண்டுவன யாவை?
36. பள்ளிக் குழந்தைகளுக்குக் காலணி வழங்கும் திட்டத்துக்கு அடிப்படையாக அமைந்த நிகழ்வு குறித்து எழுதுக.
37. தொகா நிலைத் தொடர்களை சான்றுடன் எழுதுக?

**VI. எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **2 x 6 = 12**

38. நமக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக? (அல்லது)
இயற்கை சீற்றங்களால் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கச் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?
39. தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக? (அல்லது)
நோயின்றி வாழ நாம் என்னென்ன வழிகளைக் கையாளலாம்?

**VII. எவையேனும் ஒன்று மட்டும் விடையளி.** **1 x 8 = 8**

40. தமிழரின் இசைக் கருவிகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக? (அல்லது)
வெட்டுக்கிளியும் சருகுமானும் கதையை சுருக்கி எழுதுக?

**VIII. கட்டுரை ஒன்று மட்டும் விடையளி.** **1 x 8 = 8**

41. நூலகம் - முன்னுரை - நூலகத்தின் தேவை - வகைகள் - நூலகத்திலுள்ளவை - படிக்கும் முறை - முடிவுரை (அல்லது)
நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு.

**IX. கடிதம் ஒன்று மட்டும் விடையளி.** **1 x 8 = 8**

42. விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக? (அல்லது)
இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக?

**X. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **8 x 1 = 8**

43. Antibiotic - (கலைச்சொல் தருக)
44. பசு மரத்து ஆணி போல ( உவமைத் தொடருக்கு ஏற்ற பொருளை எழுதுக)
45. வருக (வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக)
46. உடலும் உயிரும் போல (உவமைத் தொடரைப் பயன்படுத்தி தொடர் அமைக்க)
47. ஆறு - (ஒரு தொடரில் இரு பொருள் தருமாறு எழுதுக)
48. கரிகாலன் கல்லணையைக் கட்டினான் (வினாத்தொடராக மாற்றுக)
49. மழை நன்கு பெய்தது. எங்களால் விளையாட முடியவில்லை. - (இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக.)
50. திருவிழாவில் யானை ________ வந்தது. - (மேடு பள்ளம் / ஆடி அசைந்து) (சரியான இணைச் சொல்லை இட்டு நிரப்புக)



Scanned with CamScanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com